# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரித்தல் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டுக்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 பெப்புருவரியில் சுருக்கமடைந்தன**

**தயாரித்தல் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பெப்புருவரியில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 42.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான பின்னடைவினை எடுத்துக்காட்டியது.** புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றில் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றுகையினால் இப்பின்னடைவு தூண்டப்பட்டிருந்தது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உணவு மற்றும் குடிபானங்கள், புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த கேள்வியினால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. நுகர்வோரின் கொள்வனவு சக்தி சீர்குலைந்தமை கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்ததென உணவு மற்றும் குடிபானத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். எனினும், ஏப்பிறலின் பண்டிகைப் பருவகாலத்தை இலக்குவைத்து மாதத்திற்கு மாதம் அடிப்படையில் கேள்வி அதிகரிக்குமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும், பிந்திய மின்சாரக் கட்டண அதிகரிப்புச் சுற்று தமது செலவுக் கட்டமைப்பினை வெகுவாகப் பாதித்துள்ளதென பல தயாரிப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் வீழ்ச்சிக்கு அமைவாக தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த கேள்வி நிலைமைகள் அத்துடன் உலகளாவிய பண்ட விலைகள், சரக்குக் கட்டணம் மற்றும் செலாவணி வீதங்கள் என்பவற்றில் வீழ்ச்சிப்போக்கு என்பவற்றைக் கருத்திற்கொண்டு தயாரிப்பாளர்கள் பொருள் கையிருப்புக்களை குறைந்தபட்ச மட்டத்திலேயே பேணுகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் நிரம்பலர் விநியோக நேரம் மாற்றமின்றிக் காணப்பட்டது.


| மாறி | சன 2023 | பெப் 2023 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **40.8** | **42.3** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 38.0 | 41.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 37.5 | 40.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 41.0 | 40.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 35.5 | 43.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 55.0 | 50.0 | - | நீட்சியடைகின்றது, மாற்றமின்றிக் காணப்பட்டது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலவிடத்தக்க வருமானத்தில் வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்திற்கு மத்தியில், எதிர்வருகின்ற பண்டிகைப் பருவகாலத்தை இலக்குவைத்து கேள்வி மற்றும் உற்பத்தியில் அதிகரிப்பினை எதிர்பார்த்து அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்பாடொன்றினைக் காண்பித்தது.

**தயாரிப்பு கொ.மு.சு 42.3**

**2023 பெப்புருவரி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2023 சனவரிலிருந்து 0.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2023 பெப்புருவரியில் 50.0 கொண்ட நடுநிலையான அடிப்படை மட்டத்தை எட்டியது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 பெப்புருவரியில் சீனா, ரஷ்யா நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் அதிகரித்த அதேவேளை, இந்தியாவில் இச்சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்துள்ளது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 பெப்புருவரியில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 மாச்சு 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 பெப்புருவரியில் 48.7 சுட்டெண் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்து பணிகள் துறை முழுவதும் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நிலுவையிலுள்ள பணிகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகள் மூலம் இது தூண்டப்பட்டிருந்தது.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, போக்குவரத்து, காப்புறுதி மற்றும் அஞ்சல் அத்துடன் துரித அஞ்சல் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளுடன் 2023 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2023 பெப்புருவரியில் வீழ்ச்சியடைந்தன.

பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் ஆறு மாத தொடர்ச்சியான வளர்ச்சியின் பின்னர் 2023 பெப்புருவரியில் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய, குறைவடைகின்ற கொள்வனவு சக்தியினால் தூண்டப்பட்ட குறைவடைந்த நுகர்வோர் கேள்விக்கு மத்தியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துடன் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகள் தொடர்ந்தும் சீர்குலைந்தன. மேலும், போக்குவரத்துச் சரக்கு அளவுகளின் வீழ்ச்சியின் காரணமாக போக்குவரத்து துணைத் துறையும் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மனித நலம், காப்புறுதி, அஞ்சல் மற்றும் துரித அஞ்சல் துணைத் துறைகளும் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சிகளைக் காண்பித்தன. எவ்வாறிருப்பினும், வைப்புகளில் மேம்பாடுகளின் மூலம் நிதியியல் துறை தொடர்ந்து மேம்பட்டது.

மாதகாலப்பகுதியில் ஏற்பட்ட பதவிவிலகுதல்கள், புலம்பெயர்வுகள் மற்றும் ஓய்வுபெறுதல்கள் காரணமாக தொழில்நிலை பெப்புருவரியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, புதிய வியாபாரங்களில் குறைவடைதலுக்கு இசைவாக நிலுவையிலுள்ள பணிகளும் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | சன 2023 | பெப் 2023 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **50.2** | **48.7** | - | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | | |
| புதிய வியாபாரங்கள் | 56.0 | 49.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில் நடவடிக்கை | 51.5 | 45.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 39.4 | 42.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 44.1 | 43.6 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 60.1 | 63.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சுற்றுலாப் பயணி வருகைகளின் அதிகரிப்பு, எதிர்வரவுள்ள பண்டிகைப் பருவகாலம் மற்றும் பாரிய பொருளாதார உறுதிப்பாடு பற்றிய எதிர்பார்க்கைகள் என்பவற்றுக்கு மத்தியில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் பெப்புருவரியில் மேம்பட்டன. எது எவ்வாறிருப்பினும், உயர்வான வரிகள் மற்றும் மின்சாரக் கட்டணம் அத்துடன் செலவிடத்தக்க வருமானத்தில் வீழ்ச்சியின் காரணமாக குறைவடைந்த கேள்வி என்பவற்றுக்கு இசைவாக சுருங்குகின்ற இலாபங்கள் பற்றி சில பதிலிறுப்பாளர்கள் தமது கரிசனைகளை வெளியிட்டனர்.

**பணிகள்**
**கொ.மு.சு 48.7**
**2023 பெப்புருவரி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 சனவரியின் 50.0 இலிருந்து 2023 பெப்புருவரியில் 52.6 இற்கு உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்துகின்றது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 பெப்புருவரியில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக் காட்டின.

---

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2023 மாச்சு 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினை கொண்டுள்ளன.